யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

## Term Examination, March - 2016

| தரம் :- 12 (2017) | பொருளியல் | நேரம் :- 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

சுட்டெண்: ..............................

### பகுதி – I

**அறிவுறுத்தல்கள் :**

- எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணைத் தெளிவாக எழுதுக.
- 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(01) தனியார்துறை ஊழியருக்கான சம்பள மட்டம் ரூபா 2000 த்தால் அதிகரிக்கப்பட வேண்டும் - இக்கூற்றுடன் தொடர்புடைய பொருளியல் வகை


1) சிற்றினப் பொருளியல்.
2) நேர்ப்பொருளியல்.
3) நியமப்பொருளியல்.
4) பேரினப் பொருளியல்.
5) பருநிலைப்பொருளியல். (........)

agaram.lk

(02) எல்லாச் சமூகங்களும் எதிர்கொள்ளும் பொருளியலின் பொதுவான மையப் பிரச்சினையாக கருதக்கூடியது

1) வறிய மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதிருத்தல்.
2) சிறப்பான வருமானப் பங்கீட்டை மேற்கொள்ள முடியாதிருத்தல்.
3) கிடைக்கின்ற வளங்களிலிருந்து உச்சப் பயனைப் பெற இயலாதிருத்தல்.
4) சமூக நீதியை ஏற்படுத்துவதில் தடங்கல்கள் காணப்படல்.
5) மனித தேவைகளைப் பூரத்தி செய்துகொள்ளப் போதுமான வளங்கள் இல்லாதிருத்தல். (........)

(03) ஒரு பொருளாதாரத்தின் உற்பத்திச்சாத்திய எல்லை அருகில் தரப்பட்டுள்ளது.




வரைபில் புள்ளி X இலிருந்து Y புள்ளியை நோக்கி உற்பத்தி நகர்வதனால் வெளிப்படுத்தப்படுவது

1) அமையச் செலவானது அதிகரித்துச் செல்கின்றது.
2) அரிசி உற்பத்தியில் தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.
3) உற்பத்திக்காக ஒரேயின வளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
4) வளங்களின் விளைதிறனில் மாற்றம் ஏற்படவில்லை.
5) உற்பத்தியில் ஒரேவிதமான தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. (........)



Scanned with CamScanner

(04) "உற்பத்திச் செயற்றிறன்" எனும் எண்ணக்கரு தொடர்பாக தவறான கூற்று

1) முழுமையான உற்பத்திக்கு உச்ச பங்களிப்பை வழங்கக்கூடிய வகையில் வளங்களைப் பயன்படுத்தல்.
2) பொருத்தமான எல்லா வளங்களையும் உற்பத்தியில் முழுமையாகப் பயன்படுத்தல்.
3) குறித்த உற்பத்தியை மிகக் குறைந்த சராசரிச் செலவில் மேற்கொள்ளல்.
4) ஓர் அலகு உள்ளீட்டிற்கு உயர்ந்த பட்ச வெளியீட்டைப் பெறல்.
5) உற்பத்தி இயல்தகவு எல்லையில் உற்பத்தியை மேற்கொள்ளல். (.......)

(05) தாராள சந்தைப்பொருளாதாரம் ஒன்றில் காணப்படக்கூடிய மேன்மையான விடயமாக கருத முடியாதது

1) சுதந்திரமான தெரிவு.
2) வளப்பகிர்வு செயற்றிறன்.
3) போட்டித்தன்மை.
4) ஊக்குவிப்புக்கள், தூண்டுதல்கள்.
5) சுதந்திரமான தனியார் தொழில் முயற்சி. (.......)

(06) கட்டளை மூலமாக இயக்கப்படும் பொருளாதாரம் ஒன்றில் விலைகளின் பங்களிப்பாக கொள்ளக் கூடியது

1) அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்தல்.
2) இலாபத்தை உழைப்பதற்கான ஊக்குவிப்பை வழங்கல்.
3) உற்பத்தி பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ள உதவுதல்.
4) பெறுமதியை அளக்க உதவுவதன் மூலம் திட்டமிடல் கருவியாதல்.
5) நுகர்வோர் தீர்மானங்களை மேற்கொள்ள வழிகாட்டல். (.......)

(07) $Qd = 100 + 5P$ எனும் கேள்விச்சார்பின் மூலம் வெளிப்படுத்தப்படும் பண்டம்

1) ஆடம்பரப் பண்டம்.
2) இழிவுப் பண்டம்.
3) அத்தியாவசியப் பண்டம்.
4) சாதாரண பண்டம்.
5) கிஃபன் பண்டம். (.......)

(08) X, Y, Z ஆகிய பண்டங்களின் விலைக்கேள்வி நெகிழ்ச்சி பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பண்டம் | விலைக்கேள்வி நெகிழ்சி |
|---|---|
| X | 0.9 |
| Y | 1.2 |
| Z | ⊙ |

விலையானது 5% த்தால் அதிகரித்தபோது நுகர்வோனது செலவிலும் அதிகரிப்பை ஏற்படுத்தும் பண்டங்கள்

1) X உம் Y உம்.
2) X உம் Z உம்.
3) Y உம் Z உம்.
4) X மட்டும்.
5) X உம் Y உம் Z உம். (.......)




agaram.lk
Scanned with CamScanner

(09) பாணுக்கான கேள்வியானது சகல விலைகளிலும் 200 அலகுகளால் அதிகரித்தது - இது தொடர்பாக ஏற்புடைய கருத்து

1) பாணின் விலையானது நிலையாக உள்ளது.
2) அரிசியின் விலை குறைவடைந்துள்ளது.
3) பட்டரின் விலை அதிகரித்துள்ளது.
4) பாணின் விலை குறைந்துள்ளது.
5) பாணின் விலை அதிகரித்துள்ளது. (........)

(10) ஒருவகைப் பண்டமொன்றிற்கான குறுக்கு கேள்வி வளையி பின்வருமாறு காணப்பட்டது.




இதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது

1) இப்பண்டங்கள் நெருக்கமற்ற பிரதியீடுகளாகும்.
2) இவற்றின் குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி ஒன்றைவிடக் குறைந்தது.
3) இப்பண்டங்கள் நெருங்கிய பிரதியீடுகளாகும்.
4) இப்பண்டங்கள் ஆடம்பரப் பண்டங்களாகும்.
5) எதிர்க்கணிய குறுக்குக்கேள்வி நெகிழ்ச்சியை இவை கொண்டிருக்கும். (........)

(11) குறித்த சந்தையில் மரக்கறியின் விலை அதிகரித்தபோது அதன் நிரம்பல் தொகையும் அதிகரித்தது. இதற்கான காரணமாகக்கொள்ள முடியாதது.

1) மரக்கறியை உற்பத்தி செய்வதற்கான உற்பத்தியாளர் விருப்பம் அதிகரித்தல்.
2) மரக்கறி உற்பத்தியாளரின் இலாப எதிர்பார்ப்பு.
3) மரக்கறி உற்பத்திக்கான அமையச் செலவு அதிகரித்தல்.
4) மரக்கறி உற்பத்திக்கான எல்லைச் செலவு அதிகரித்தல்.
5) மரக்கறி உற்பத்தியின்போது எல்லை விளைவு குறைதல். (........)

(12) குறித்த ஒரு பண்டத்தின் விலைமாற்றம், நிரம்பல் தொகைமாற்றம் என்பன அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| விலை மாற்றம் | நிரம்பல் தொகை மாற்றம் |
|---|---|
| 10 % | 8% |
| 20 % | 15% |


இப்பண்டத்தின் நிரம்பல் நெகிழ்ச்சி தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடியது

1) நெகிழ்ச்சியின் பெறுமதி ஒன்றை விடக் கூடியது.
2) விலை அதிகரிக்கும்போது நிரம்பல் நெகிழ்ச்சியும் அதிகரிக்கும்.
3) நிரம்பல் வளையி விலை அச்சை வெட்டிச் செல்லும்.
4) விவசாயப் பண்டங்களின் நெகிழ்ச்சி இத்தகையது.
5) விலை அதிகரிக்கும்போது நிரம்பல் நெகிழ்ச்சி குறைவடையும். (........)



agaram.lk
Scanned with CamScanner

(13) கீழுள்ள வரைபடமானது மீனுக்கான சந்தைக்கேள்வி, நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது. சந்தையில் 50 அலகுகள் நிரம்பல் செய்யப்படும்போது மிகைக்கேள்வி விலையாக அமைவது




1) ரூபா 5 ஆகும்.
2) ரூபா 12 ஆகும்.
3) ரூபா 7 ஆகும்.
4) ரூபா 14 ஆகும்.
5) ரூபா 9 ஆகும்.


(......)

(14) குறித்தவொரு பண்டத்தின் அலகு ஒன்றின் மீது அரசினால் ரூபா 10 வரியாக விதிக்கப்பட்ட போது அதில் ரூபா 7 நுகர்வோனால் செலுத்தப்பட்டதாயின் இப்பண்டமானது

1) நெகிழ்வற்ற விலைக்கேள்வி நெகிழ்ச்சி, நெகிழ்வுள்ள நிரம்பல் நெகிழ்ச்சியைக் கொண்டது
2) நெகிழ்வுள்ள விலைக்கேள்வியையும், நெகிழ்வற்ற நிரம்பல் நெகிழ்ச்சியையும் கொண்டது
3) பூரண விலைக்கேள்வி நெகிழ்ச்சி, பூச்சிய நிரம்பல் நெகிழ்ச்சியைக் கொண்டது.
4) பூச்சிய விலைக்கேள்வி நெகிழ்ச்சி, பூரண நிரம்பல் நெகிழ்ச்சியைக் கொண்டது.
5) விலைக்கேள்வி நெகிழ்ச்சியும் நிரம்பல் நெகிழ்ச்சியும் ஒன்றுக்குச் சமமாக காணப்படும்.

(......)

(15) அரசாங்கமானது நுகர்வோன் நலன்கருதி அத்தியாவசியப் பொருட்கள் மீது $P_1$ விலையை உச்ச விலையாக நிர்ணயிக்கிறது.




agaram.lk

உச்சவிலையின் பின்னர் சந்தையில் ஏற்படும் மிகைக்கேள்வி அளவு, கறுப்புச்சந்தை விலை, நுகர்வோன்மிகை அளவு என்பவற்றைச் சரியாகக் காட்டும் விடை

(......)


| மிகைக்கேள்வி அளவு | கறுப்புச்சந்தை விலை | நுகர்வோன்மிகை அளவு |
|---|---|---|
| 1) $Q_3 - Q_1$ | $P_3$ | A, B, C |
| 2) $Q_3 - Q_2$ | $P_2$ | A, B, C, D |
| 3) $Q_3 - Q_1$ | $P_0$ | A, B |
| 4) $Q_2 - Q_1$ | $P_2$ | A |
| 5) $G$ | $P_2$ | D |



Scanned with CamScanner

(16) நிறுவனம் ஒன்றின் குறுங்கால உற்பத்தி நடத்தையில் மொத்த உற்பத்தியானது குறைந்து செல்லும் வேகத்தில் அதிகரிக்கும்போது நிகழ முடியாதது.
1) சராசரி உற்பத்தி மற்றும் எல்லை உற்பத்தி என்பன அதிகரித்துச் செல்லும்.
2) சராசரி உற்பத்தி வீழ்ச்சியடைய எல்லை உற்பத்தி அதிகரித்துச் செல்லும்.
3) சராசரி உற்பத்தி வீழ்ச்சியடைந்து செல்ல எல்லை உற்பத்தி மாறாமல் இருக்கும்.
4) சராசரி உற்பத்தியும் எல்லை உற்பத்தியும் வீழ்ச்சியடையும்.
5) சராசரி உற்பத்தி அதிகரித்துச்செல்ல எல்லை உற்பத்தி வீழ்ச்சியடைந்து செல்லும். (........)

(17) நீண்டகாலத்தில் நிறுவனம் ஒன்று எதிர்கொள்ளும் சராசரிச் செலவு வளையை வரைபடம் காட்டுகிறது.




இந்நிறுவனம் தொடர்பாக உடன்பட முடியாத கருத்து
1) நிறுவனத்தின் உற்பத்தி இயலுமை குறைந்து செல்கிறது.
2) நிறுவனமானது இயந்திர உபகரணங்களை அதிகம் பயன்படுத்துகின்றது.
3) உற்பத்தி நடவடிக்கையின்போது வேலைப் பகிர்வு நிலை காணப்படுகிறது.
4) உற்பத்தியில் சிறப்புத்தேர்ச்சி நிலை காணப்படுகின்றது.
5) உற்பத்தியின்போது அலகுக்கான செலவு குறைந்து செல்கிறது. (........)

agaram.lk

(18) கீழுள்ள அட்டவணையில் ஒரு நிறுவனத்தின் வெளியீட்டு மட்டம், மொத்த வருமானம், மொத்தச் செலவு என்பன தரப்பட்டுள்ளன.

| வெளியீடு (அலகு) | மொத்த வருமானம் | மொத்தச் செலவு |
|---|---|---|
| 0 | 0 | 3 |
| 1 | 12 | 12 |
| 2 | 24 | 18 |
| 3 | 36 | 27 |
| 4 | 48 | 33 |
| 5 | 60 | 48 |

இந்நிறுவனத்தின் இலாப உச்சப்படுத்தல் வெளியீட்டு மட்டம்
1) அலகு 5 ஆகும்.
2) அலகு 4 ஆகும்.
3) அலகு 2 ஆகும்.
4) அலகு 3 ஆகும்.
5) அலகு 1 ஆகும். (........)



Scanned with CamScanner

(19) நிறைபோட்டியில் இயங்கும் நிறுவனம் ஒன்று பொருளியல் இலாபத்தை உழைக்கும்போது நிலவ முடியாதது

1) மொத்த வருவாய் மொத்தச் செலவைவிட உயர்வாகக் காணப்படும்.
2) சராசரி வருமானம் சராசரிச் செலவைவிட அதிகமாகக் காணப்படும்.
3) எல்லை வருமானம் எல்லைச் செலவை விட உயர்வாகக் காணப்படும்.
4) சராசரிச் செலவைவிட விலை பெரிதாக காணப்படும்.
5) எல்லை வருமானம் சராசரிச் செலவை விட உயர்வாக இருக்கும்.

(.......)

(20) சந்தைக் கட்டமைப்பில் உள்ள சில சந்தையமைப்புக்களின் உற்பத்தியின் தன்மைகள் கீழே தரப்படுகின்றன.

A – பேதப்படுத்தப்பட்டது
B – தனித்துவமானது
C – ஒத்ததன்மையானதும் பேதப்படுத்தப்பட்டதும்
D – ஒத்த தன்மையானது

இவற்றுள் A, D கூற்றுக்களுக்குப் பொருத்தமான சந்தையமைப்புக்கள் முறையே

1) தனியுரிமைச் சந்தை, தனியுரிமைப் போட்டிச் சந்தை.
2) தனியுரிமைச் சந்தை மற்றும் நிறைபோட்டிச் சந்தை.
3) தனியுரிமைப் போட்டிச் சந்தை மற்றும் சிலருரிமைச் சந்தை.
4) நிறை போட்டிச் சந்தை மற்றும் சிலருரிமைச் சந்தை.
5) தனியுரிமைப்போட்டிச் சந்தை மற்றும் நிறைபோட்டிச் சந்தை.

(.......)

(20 x 1 = 20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

## Term Examination, March - 2016

FWC

தரம் :- 12 (2017) பொருளியல்

### பகுதி – II

❖ உபபிரிவு 'அ', உபபிரிவு 'ஆ' ஆகிய ஒவ்வொரு பிரிவிலிருந்தும் கட்டாயமாக இரு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

### உப பிரிவு – 'அ'

(01) i) பொருளாதார வளங்கள் - பொருளாதாரப் பண்டங்கள் வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

ii) பொருளியலில் அருமை என்ற எண்ணக்கருவை விளக்குக. அது எவ்வாறு தெரிவுப் பிரச்சினையை உருவாக்குகிறது? (4 புள்ளிகள்)

iii) பொருளாதாரத்திலுள்ள சகல வளங்களும் அருமையானவை எனும் கூற்றுடன் உடன்படுகிறீரா? (4 புள்ளிகள்)

iv) மீளமைக்க முடியாத வளங்களை மீளமைக்கக்கூடிய வளங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுத்தலாம்? (4 புள்ளிகள்)

v) கீழ்வருவனவற்றை எவ்வகை உற்பத்திக் காரணியாகக் கருதுவீர்?

(a) உளமருத்துவர் ஒருவரால் வழங்கப்படும் 1 மணி நேர ஆலோசனை

(b) புதிதாக அமைக்கப்பட்டு வரும் துறைமுகம்

(c) நிலத்தடியில் காணப்படும் காரியப்படிமம்

(d) புதிதாக ஆடைத்தொழிலைத் தொடங்கியுள்ள நிறுவன உரிமையாளர்

(4 புள்ளிகள்)

(02) i) உற்பத்தி இயல்தகவு வளையி என்றால் என்ன? வரைபடம் ஒன்றைப் பயன்படுத்தி விளக்குக. (4 புள்ளிகள்)

ii) ஒரு நாட்டின் உற்பத்தி இயலளவை இடதுபுறமாக நகர்வடையச் செய்யும் காரணிகள் எவை? (2 புள்ளிகள்)

iii) உற்பத்தி இயல்தகவு வளையியானது வெளிப்புறமாக குவிவடைந்து செல்வது ஏன்? (3 புள்ளிகள்)

iv) பின்வரும் நிகழ்வுகளை உற்பத்தி இயல்தகவு எல்லையைப் பயன்படுத்தி விளக்குக.

அ) நாடொன்றுக்கு எதிராக பொருளாதாரத்தடை விதிக்கப்படல்

ஆ) கல்விக்கான வள ஒதுக்கீடு அதிகரிக்கிறது.

இ) ஆடை உற்பத்தியில் புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படல்

(6 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

v) பாதணி உற்பத்தி நிறுவனம் ஒன்று நிலவுகின்ற தொழில்நுட்பத்தின் கீழ் வளங்களை உச்ச செயற்றிறனுடன் பயன்படுத்தினால் உச்ச அளவில் 45 அலகுகள் சப்பாத்துக்களை உற்பத்தி செய்யலாம். செருப்பு உற்பத்தியை ஒவ்வொரு அலகால் உயர்த்தும்போது சப்பாத்து உற்பத்தியானது 43, 40, 30, 16 என்ற வகையில் குறையும். சப்பாத்து உற்பத்தி 0 ஆகும் போது உச்ச அளவில் 5 அலகுகள் செருப்பை உற்பத்தி செய்யலாம்.

(அ) மேலுள்ள தகவல்களின் உதவியுடன் இரு பொருட்களினதும் உற்பத்தி சேர்க்கைகளைக் காட்டும் வகையில் அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக. (3 புள்ளிகள்)

(ஆ) செருப்பு உற்பத்தியை ஓரலகினால் அதிகரிக்கும் போது சப்பாத்து உற்பத்தியில் இழக்கப்படும் அளவினைக் கணிப்பிடுக. (2 புள்ளிகள்)

(03) i) பொருளாதார முறைமையொன்றினால் நிறைவேற்றப்படும் பிரதான செயற்பாடுகள் எவை? (3 புள்ளிகள்)

ii) அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பாகத் தீர்மானம் எடுத்தலில் கட்டளைப் பொருளாதாரமும் சந்தைப் பொருளாதாரமும் வேறுபடும் விதத்தைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii) பொருளாதாரமொன்றில் உற்பத்தித் தொழில்நுட்பத்தைத் தெரிவு செய்வது பற்றிய பிரச்சினை ஏன் ஏற்படுகின்றது? (3 புள்ளிகள்)

iv) கீழே தரப்பட்ட இயல்புகளைக் கொண்ட பொருளாதார அமைப்புக்கள் எவை எனக் குறிப்பிடுக.

அ) தனியார் சுதந்திரம் வரையறுக்கப்பட்டிருத்தல்
ஆ) உற்பத்தி வளங்கள் குறித்த குழுவின் உடைமை
இ) அரசின் பணி மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்
ஈ) வளங்களின் உரிமையைத் தனியாரும், பொதுத்துறையும் கொண்டிருத்தல்
உ) தனிநபர் நலனின் கீழ் செயற்படல்

(5 புள்ளிகள்)

v) தாராள சந்தைப் பொருளாதாரத்தில் அரச தலையீடு அவசியமானது என்பதற்கான நியாயங்களை முன்வைக்க. (5 புள்ளிகள்)

## உப பிரிவு – 'ஆ'

(04) i) பொருளியலில் பயனுடைய கேள்வியே கேள்வியாகக் கருதப்படும். இக்கூற்றுடன் உடன்படுகின்றீரா? (4 புள்ளிகள்)

ii) பாணுக்கான தனிநபர் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை? (4 புள்ளிகள்)

iii) குறித்த ஒரு பொருளின் விலை 10 ரூபாவிலிருந்து 20 ரூபாவாக அதிகரித்தபோது அதன் கேள்வித்தொகை 200 அலகுகளிலிருந்து 150 அலகுகளாக வீழ்ச்சியடைந்தது.

அ) இதற்கு அடிப்படையாகவுள்ள காரணங்கள் எவை? (2 புள்ளிகள்)
ஆ) இப்பண்டத்தின் விலை மாற்ற வீதத்தைக் கணிப்பிடுக.
இ) கேள்வித்தொகை மாற்ற வீதம் யாது? (2 புள்ளிகள்)
ஈ) விலைக்கேள்வி நெகிழ்ச்சியின் பெறுமதியை மதிப்பிடுக. (2 புள்ளிகள்)
உ) மேலே விலைக்கேள்வி நெகிழ்ச்சிக் கணிப்பீட்டிற்காக பயன்படுத்திய சார்மாறியையும் சாராமாறியையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
ஊ) விலைக்கேள்வி நெகிழ்ச்சியின் பெறுமதிக்கமைய இப்பண்டத்தின் கேள்விக் கோட்டினை வரைக. (2 புள்ளிகள்)



agaram.lk

Scanned with CamScanner

(05) i) துவிச்சக்கர வண்டிக்கான சந்தையில் பின்வரும் நிகழ்வுகள் ஏற்படுத்தக்கூடிய விளைவுகளை வரைபட உதவியுடன் விளக்குக.

அ) மோட்டார் சைக்கிளின் விலையில் ஓர் அதிகரிப்பு

ஆ) பெற்றோலின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி

இ) துவிச்சக்கர வண்டி உற்பத்தித் தொழில்நுட்பத்தில் ஓர் முன்னேற்றம் (6 புள்ளிகள்)

ii) குறித்த பொருளொன்றின் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

$Qd = 300 - 10P$

$Qs = 150 - 20P$

மேற்படி தகவல்களின் அடிப்படையில் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

i) சந்தைச் சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை (2 புள்ளிகள்)

ii) விலைகள் 2, 4, 6, 8 மற்றும் 10 இற்கான கேள்வி நிரம்பல் அட்டவணையைத் தயாரிக்க. (5 புள்ளிகள்)

iii) அரசாங்கத்தினால் இப்பொருள் மீது ரூபா 3 அலகு மானியமாக வழங்கப்படுமாயின்

அ) மானியத்தின் பின்னரான சமநிலை விலை, சமநிலைத்தொகை (3 புள்ளிகள்)

ஆ) அரசின் மானியச்செலவு யாது? சமூகநலன் இழப்பைக் கணிப்பிடுக. (4 புள்ளிகள்)

(06) i) உற்பத்திச் செயற்பாட்டில் குறுங்காலம், நீண்டகாலம் என்பவற்றை வேறுபடுத்துக.

ii) மொத்த உற்பத்திக்கும் எல்லை உற்பத்திக்கும் இடையிலான தொடர்பு யாது? (4 புள்ளிகள்)

iii) ஒரு உற்பத்தி நிறுவனத்தின் வெளியீடுகள் மற்றும் மொத்த மாறும் செலவு பற்றிய தரவுகள் கீழே தரப்படுகின்றன. (மில். ரூபா)

இந்நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு 40 மில். ரூபா

| வெளியீட்டு அலகு | மொத்த மாறும் செலவு |
|---|---|
| 1 | 10 |
| 2 | 20 |
| 3 | 25 |
| 4 | 35 |
| 5 | 55 |
| 6 | 100 |

அ) 1ம், 2ம் வெளியீட்டு அலகுகளுக்குரிய மொத்தச் செலவு யாது? (2 புள்ளிகள்)

ஆ) 3 வது அலகு வெளியீட்டுக்குரிய சராசரிச் செலவு யாது? (2 புள்ளிகள்)

இ) 6வது அலகுக்குரிய எல்லைச் செலவைக் கணிக்க. (2 புள்ளிகள்)

iv) பின்வரும் கைத்தொழில்களை எவ்வகைச் சந்தை அமைப்பாக கருதுவீர்?

அ) பாதணிக் கைத்தொழில்

ஆ) சீமெந்துக் கைத்தொழில்

இ) மீன்பிடிக் கைத்தொழில்

ஈ) நீர்வழங்கல் தொழில் (4 புள்ளிகள்)

v) நிறைபோட்டி நிறுவனத்தினதும், தனியுரிமை நிறுவனத்தினதும் கேள்விக்கோடுகளை வரைந்துகாட்டுக. (2 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

| பொருளியல் | புள்ளித்திட்டம் | தரம் :- 12 (2017) |
|---|---|---|

## பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| (01) 3 | (06) 4 | (11) 5 | (16) 1 |
| (02) 5 | (07) 5 | (12) 2 | (17) 1 |
| (03) 1 | (08) 2 | (13) 3 | (18) 2 |
| (04) 2 | (09) 1 | (14) 1 | (19) 3 |
| (05) 3 | (10) 3 | (15) 4 | (20) 5 |

## பகுதி – II

### உப பிரிவு "அ"

(01) i)

| பொருளாதார வளங்கள் | பொருளாதாரப் பண்டங்கள் |
|---|---|
| • தேவைகளோடு ஒப்பிடுகையில் வரையறுக்கப்பட்ட அளவில் அருமைத்தன்மையும் அமையச் செலவையும் கொண்டதுமான வளங்கள்<br>• இவை உற்பத்திக்குப் பயன்படும் | தேவைகளோடு ஒப்பிடுகையில் வரையறுக்கப்பட்ட அளவில் அருமைத்தன்மையும், அமையச் செலவையும் பொண்டதுமான பண்டங்கள் இவை நுகர்வுக்குப் பயன்படும் |

(4 புள்ளி)

ii) அருமை - அளவற்ற மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு சமூகத்திடமுள்ள வளங்கள் பற்றாக்குறையாக இருத்தல் (2 புள்ளி)

வளங்கள் அருமையாக இருப்பதனால்தான் பல்வேறு போட்டி விருப்பங்களிடையே அவற்றை எவ்வாறு ஒதுக்குவது எனத் தெரிவு செய்ய வேண்டியுள்ளது. (1 புள்ளி)

எனவே அருமை காரணமாகவே தெரிவுப் பிரச்சினை தோன்றுகிறது (1 புள்ளி)

iii) இல்லை

மனித தேவைகள் / விருப்பங்களுக்கு குறைவாக கிடைக்கின்ற வளங்களே "அருமையானவை" (1 புள்ளி)

இவை பொருளாதார வளங்கள் எனப்படும். (1 புள்ளி)

மனித தேவைகள் / விருப்பங்களுக்கு மிகையாகக் கிடைக்கின்ற வளங்கள் அருமையற்றவை (1 புள்ளி)

இவை பொருளாதாரமல்லா வளங்கள் எனப்படும். (1 புள்ளி)

iv) ⅄ மீளமைக்கக்கூடிய வளம் என்பது பயன்படுத்துவதால் இழக்கப்படாத/ குறைந்துவிடாத மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய இயற்கை வளமாகும். (1 புள்ளி)


இவை உயிருள்ள வளங்களாகும் (1 புள்ளி)

⅄ மீளமைக்க முடியாத வளம் என்பது பயன்படுத்தப்படுவதனால் இழக்கப்படுகின்ற குறைவடைகின்ற இயற்கையால் மீளுருவாக்க முடியாத வளங்களாகும். (1 புள்ளி)

இவை உயிரற்ற வளங்களாகும். (1 புள்ளி)

v) a) உழைப்பு b) மூலதனம் c) நிலம் d) முயற்சியாண்மை (4 புள்ளி)

(02) i) பொருளாதாரமொன்றில் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிலவும் தொழில்நுட்பத்தின்கீழ் ... வளங்களையும் உச்ச வினைத்திறனுடன் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு பொருட்களின் உத்தம உற்பத்திச் சேர்க்கைகளை தொடர்புபடுத்தி வரையப்படும் வளையி உற்பத்திச்சாத்திய வளையி ஆகும். (2 புள்ளி)




(2 புள்ளி)

ii) வளத்திரட்சி குறைவடைதல் / வீழ்ச்சி

வளங்களின் விளைதிறன் குறைவடைதல் / வீழ்ச்சி


iii) உற்பத்திச் சாத்திய வளையி வெளிப்புறம் நோக்கிக் குவிந்திருக்கக் காரணம் அதிகரிக்கும் அமையச்செலவு ஆகும். (1 புள்ளி)

வளங்களின் வினைத்திறன் வேறுபாடு

உற்பத்தியில் பயன்படுத்தும் தொழில்நுட்பம் வேறுபடல்

ஆகிய காரணிகளால் அமையச் செலவு அதிகரிக்கும். (1 புள்ளி)


iv) (அ) பொருளாதாரத்தடை விதிக்கப்படல்





நாடொன்றின் மீது பொருளாதாரத் தடை விதிக்கும் போது அந்நாட்டின் வளத்திரட்சி மற்றும் உற்பத்தி தொழில்நுட்பத்தில் இழப்பு ஏற்படுவதால் இடதுபுறம் நகரும்

படம் - (1 புள்ளி) விளக்கம் (1 புள்ளி)

(ஆ) கல்விக்கான வள ஒதுக்கீடு அதிகரித்தல்





agaram.lk



Scanned with CamScanner

கல்விக்கான வள ஒதுக்கீடு அதிகரிப்பதால் உற்பத்திப் புள்ளி A யிலிருந்து B நோக்கி நகர்வடைகிறது.

(இ) ஆடை உற்பத்தியில் புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படல்




ஆடை உற்பத்தியில் வினைதிறன் அதிகரித்து உற்பத்திச் சாத்திய வளையி ஆடை உற்பத்தி சார்பாக வலது புறம் நகரும்.

(படம் 1 புள்ளி)
விளக்கம் (1 புள்ளி)

v) அ)

| செருப்பு உற்பத்தி (அலகுகளில்) | சப்பாத்து உற்பத்தி (அலகுகளில்) |
|---|---|
| 0 | 45 |
| 1 | 43 |
| 2 | 40 |
| 3 | 30 |
| 4 | 16 |
| 5 | 0 |

(3 புள்ளி)

ஆ) செருப்பு உற்பத்தி $0 - 1 \rightarrow, 1 - 2 \rightarrow, 2 - 3 \rightarrow, 3 \rightarrow 4, 4 \rightarrow 5$ சப்பாத்தில் இழக்கப்படுவது 2 அலகு, 3 அலகு, 10 அலகு, 24 அலகு, 16 அலகு

(2 புள்ளி)

(03) i) என்ன பொருளை எந்தளவு உற்பத்தி செய்ய வேண்டும் எவ்வாறு உற்பத்தி செய்ய வேண்டும் யாருக்காக உற்பத்தி செய்ய வேண்டும் எனும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகும்.
(1 தொழிற்பாட்டு 1 புள்ளிவீதம் 3 புள்ளிகள்)

ii) கட்டளைப் பொருளாதாரத்தில் அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்தல் பற்றிய தீர்மானங்கள் திட்டமிடல் அதிகாரிகளால் இடப்படும் கட்டளைகளுக்கு அமைவாக நடைபெறும். பொருட்கள் சேவைகளினது விலைகள் திட்டமிடல் அதிகாரிகளால் நிர்ணயம் செய்யப்படும் வேளை கொள்வனவாளர் கட்டுப்பாட்டு விலையின் கீழ் பொருட்கள் சேவைகளுக்கு கேள்வி எழுப்புவர். (2 புள்ளி)

சந்தைப் பொருளாதாரத்தில் வள ஒதுக்கீடு பற்றிய தீர்மானங்கள் இலாபம் பற்றிய சமிக்ஞைகளின் அடிப்படையில் விலைப்பொறிமுறையூடாக மேற்கொள்ளப்படும். இலாப நோக்கில் உற்பத்தி இடம்பெறுவதால் இலாபம் தராத பண்டங்களின் உற்பத்தி இடம்பெறமாட்டாது. (2 புள்ளி)

iii) காரணிகளை ஒன்றிணைக்கக்கூடிய மாற்றுமுறைகள் இருத்தல்
ஒப்பீட்டுச் செலவு வேறுபடல்
வளங்களின் கிடைப்பனவு வரையறுக்கப்பட்டிருத்தல் போன்ற காரணங்களால் ஏற்படுகிறது.
(3 புள்ளி)

iv) அ) கட்டளைப் பொருளாதாரமுறை
ஆ) பாரம்பரியப் பொருளாதாரமுறை
இ) சந்தைப் பொருளாதாரமுறை
ஈ) கலப்புப் பொருளாதாரமுறை
உ) சந்தைப் பொருளாதாரமுறை

(1 புள்ளி வீதம் 5 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

v) பொதுப்பண்டங்களை வழங்கல்
சமூகநலப் பண்டங்களை வழங்கல்
மேன்மையில்லாப் பண்டங்களைக் கட்டுப்படுத்தல்
வெளிவாரி விளைவுகளைச் சீர்செய்தல்
போட்டித்தன்மையை ஊக்குவித்தல்
தகவல்களை வழங்குதல்
வருமானம் சொத்து மீள்பங்கீடு
பேரினப் பொருளாதார உறுதிபேணல்
விலைக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்தல்
நிலைத்து நிற்கும் அபிவிருத்தி

(ஏதாவது 5 இற்கு 5 புள்ளிகள்)

## உப பிரிவு "ஆ"

(04) i) ஆம் (1 புள்ளி)

கொள்வனவு செய்வதற்கான விருப்பம்
கொள்வனவு செய்வதற்கான ஆற்றல்
கொள்வனவு செய்வதற்கான திட்டம் / தீர்மானம் ஆகிய 3 உம் உள்ளடங்கிய பயனுடைய கேள்வி என பொருளியலில் கருதப்படும்.

(3 புள்ளி)

ii) பாணின் விலை
அரிசியின் விலை (பதிலீடு)
பட்டரின் விலை (நிரப்பு)
பாணின் சுவை
நுகர்வோர் வருமானம்

(ஏதாவது 4 இற்கு 4 புள்ளிகள்)

iii) அ – வருமான விளைவு
பதிலீட்டு விளைவு (2 புள்ளி)

ஆ) $\frac{\text{விலைமாற்றம்}}{\text{ஆரம்பவிலை}} \times 100$

$\frac{10}{10} \times 100 = 100\%$

சமன்பாடு 1 புள்ளி
கணிப்பீடு 1 புள்ளி

இ) $\frac{\text{தொகைமாற்றம்}}{\text{ஆரம்பதொகை}} \times 100$

$\frac{50}{200} \times 100 = -25\%$

சமன்பாடு 1 புள்ளி
கணிப்பீடு 1 புள்ளி

ஈ) $Edp = \frac{SQd\,\%}{SP\,\%}$

$\frac{-25}{100}$

$-0.25$


(2 புள்ளி)

உ) சாராமாறி – விலை
சார்ந்தமாறி – கேள்வித்தொகை (2 புள்ளி)




agaram.lk
Scanned with CamScanner

ஊ)




(2 புள்ளி)


(ii) அ)




ஆரம்ப சமநிலை வலை – P
ஆரம்ப சமநிலைத்தொகை – Q
மோட்டார் சைக்கிளின் விலை அதிகரிப்பு – துவிச்சக்கர வண்டிக்கான கேள்வியை அதிகரித்தால் அதன் கேள்விக்கோடு $D_1$ ஆக வலது புறம் நகரல் பதிய சம விலை - $P_1$ ஆக உயரும். புதியசமதொகை $Q_1$ ஆக அதிகரிக்கும்.

(படம் 1 விளக்கம் 1 – 2 புள்ளி)


ஆ)




பெற்றோலின் விலை வீழ்ச்சியால் துவிச்சக்கர வண்டிக்கான கேள்வி குறைய கேள்விக்கோடு இடதுபுறம் நகர்ந்தது புதிய சமவிலை $P_1$ ஆக குறைவடைய புதிய சம தொகை $Q_1$ ஆக குறைவடைந்தது

(2 புள்ளி)

இ)




உற்பத்தித் தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் ஏற்பட்டதால் நிரம்பல் அதிகரித்து நிரம்பல்கோடு வலது புறம் நகர்ந்தது
புதிய சமநிலை விலை $P_1$ ஆக குறைவடைய,
புதிய சம தொகை $Q_1$ ஆக அதிகரித்தது

(2 புள்ளி)

ii) I - Pe - 5/-
Be - 250 அலகுகள்

(2 புள்ளி)

| P | Qd | Qs |
|---|---|---|
| 2 | 280 | 190 |
| 4 | 260 | 230 |
| 6 | 240 | 270 |
| 8 | 220 | 310 |
| 10 | 200 | 350 |

(ஒரு விலைக்கான கணிப்பீட்டுக்கு 1 புள்ளி வீதம் - 5 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

iii) அ) மானியத்தின் பின் நிரம்பல் சமன்பாடு

$QS = 210 + 20P$ (1 புள்ளி)

புதிய Pe – 3/–

புதிய Qe – 270 அலகுகள் (2 புள்ளி)

ஆ) $3 \times 270 = 810/-$

சமூக நலன் இழப்பு - 30/– (2 புள்ளி)

(06) i) குறுங்காலம் - உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் எல்லாக் காரணிகளையும் மாற்றிக்[கொள்ள] முடியாத காலம் (1 புள்ளி)

இங்கு மாறும் உள்ளீடுகளும், நிலையான உள்ளீடுகளும் காணப்படும். (1 புள்ளி)

நீண்டகாலம் - உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் எல்லாக் காரணிகளையும் மாற்றிக் கொ[ள்ளக்] கூடிய காலம் (1 புள்ளி)

நீண்ட காலத்தில் எல்லா உள்ளீடுகளும் மாறும் உள்ளீடுகளாகும். (1 புள்ளி)

ii) மொத்த உற்பத்தி (TP) அதிகரித்துச்செல்லும் வேகத்தில் அதிகரிக்கும்போது எல்லை உற்பத்தி (mp) அதிகரிக்கும்.

TP குறைந்து செல்லும் வேகத்தில் அதிகரிக்கும் போது MP வீழ்ச்சியடையும்.

TP உச்ச நிலையை அடையும் போது MP பூச்சியமாகும்.

TP வீழ்ச்சியடையும் போது MP எதிர்க்கணியமாகும்.

(ஒவ்வொன்றுக்கும் 1 புள்ளி வீதம் 4 புள்[ளி])

iii) அ) 1 ம் அலகுக்குரிய மொத்தச் செலவு – 50 M/–

2 ம் அலகுக்குரிய மொத்தச் செலவு – 60 M/– (2 புள்ளி)

ஆ) $AC = \frac{TC}{Q}$ (1 புள்ளி)

$= \frac{65}{3}$

$= 21.66\ M/-$ (1 புள்ளி)

இ) $MC = \frac{\Delta TC}{\Delta Q}$

$= \frac{45}{1} = 45\ m/-$ (1 புள்ளி)


iv) அ) தனியுரிமைப்போட்டி

ஆ) சிலருரிமை


இ) நிறைபோட்டி

ஈ) தனியுரிமை (4 புள்ளி)

v) நிறைபோட்டி




தனியுரிமை




(2 புள்ளி)

agaram.lk



Scanned with CamScanner